# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 17

## 2025, மார்ச் 28, வெள்ளிக்கிழமை

## பங்குனி 14 , திருவள்ளுவர் ஆண்டு – 2056

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற் குறுப்பு."**

(ஆறு, கடல் எனும் இருபுனலும், வளர்ந்தோங்கி நீண்டமைந்த மலைத் தொடரும், வருபுனலாம் மழையும், வலிமைமிகு அரணும், ஒரு நாட்டின் சிறந்த உறுப்புகளாகும்.)

1. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 121 முதல் 130 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

2. 2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்

2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.3.2025–ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற 2025–2026–ஆம் ஆண்டுக்கான கீழ்காணும் மானியக் கோரிக்கைகள் எண்.36 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, கோரிக்கை எண்.49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் கோரிக்கை எண்.53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகியவற்றின் மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் மற்றும் விவாதத்திற்குப் பதிலுரையும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

மானியக் கோரிக்கை எண்.36 – 27.3.2025–ஆம் நாளன்று திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.36 – 27.3.2025–ஆம் நாளன்று திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.49 –27.3.2025–ஆம் நாளன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.49 – 27.3.2025–ஆம் நாளன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

..2

மானியக் கோரிக்கை எண்.53 – 27.3.2025–ஆம் நாளன்று சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.53 – 27.3.2025–ஆம் நாளன்று சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

3. <u>2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்</u>

2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

<u>கோரிக்கை எண்.18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)</u>

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கை எண்.18–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.238,29,46,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. இராம. கருமாணிக்கம்
2. திரு. R. ராதாகிருஷ்ணன்
3. திரு. க. அசோகன்
4. திரு. JMH. அசன் மௌலானா
5. திரு. ஆ.மு. முனிரத்தினம்
6. திரு. செ. ராஜேஷ் குமார்
7. திரு. இரா. அருள்
8. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
9. திரு. ஜி.கே. மணி
10. திரு. ச. சிவகுமார்
11. திரு. எம்.ஆர். காந்தி
12. திரு. மா. சின்னதுரை
13. திரு. K. மாரிமுத்து
14. திரு. ட்டி. இராமச்சந்திரன்
15. திரு. S.S. பாலாஜி
16. திரு. பி. அய்யப்பன்
17. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
18. முனைவர் (திருமதி) தாரகை கத்பட்
19. திரு. சா. மாங்குடி

<u>கோரிக்கை எண்.54 – வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை</u>

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) மானியக் கோரிக்கை எண்.54–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.733,44,74,000/–, மூலதனக் கணக்கில் ரூ.610,92,50,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

..3

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. இராம. கருமாணிக்கம்
2. திரு. R. ராதாகிருஷ்ணன்
3. திரு. க. அசோகன்
4. திரு. JMH. அசன் மௌலானா
5. திரு. ஆ.மு. முனிரத்தினம்
6. திரு. செ. ராஜேஷ் குமார்
7. திரு. இரா. அருள்
8. திரு. எஸ்.பி.வெங்கடேஷ்வரன்
9. திரு. ஜி.கே. மணி
10. திரு. ச. சிவகுமார்
11. திரு. எம்.ஆர். காந்தி
12. திரு. ட்டி. இராமச்சந்திரன்
13. திரு. பி. அய்யப்பன்
14. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
15. திரு. ஆர். வைத்திலிங்கம்
16. முனைவர் (திருமதி) தாரகை கத்பட்
17. திரு. வி.பி. நாகைமாலி
18. திரு. மா. சின்னதுரை
19. திரு. K. மாரிமுத்து
20. திரு. துரை சந்திரசேகர்
21. திரு. S.S. பாலாஜி
22. திரு. சா. மாங்குடி

<u>**கோரிக்கை எண்.17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)**</u>

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கை எண்.17–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,867,77,04,000/–, மூலதனக் கணக்கில் ரூ.111,50,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. இராம. கருமாணிக்கம்
2. திரு. R. ராதாகிருஷ்ணன்
3. திரு. JMH. அசன் மௌலானா
4. திரு. க. அசோகன்
5. திரு. செ. ராஜேஷ் குமார்
6. திரு. இரா. அருள்
7. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
8. திரு. ஜி.கே. மணி
9. திரு. ச. சிவகுமார்
10. திரு. எம்.ஆர். காந்தி
11. திரு. மா. சின்னதுரை
12. திரு. ஆ.மு. முனிரத்தினம்
13. திரு. பி. அய்யப்பன்
14. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
15. முனைவர் (திருமதி) தாரகை கத்பட்
16. திரு. வி.பி. நாகைமாலி
17. திரு. துரை சந்திரசேகர்
18. திரு. S.S. பாலாஜி
19. திரு. சா. மாங்குடி

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. திரு. பி. அய்யப்பன்
2. திரு. த. மனோ தங்கராஜ்
3. திரு. எஸ். சுதர்சனம்
4. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
5. திரு. எஸ். தங்கப்பாண்டியன்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

..4

மானியக் கோரிக்கை எண்.18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)–இன் கீழ் கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகை முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.54 – வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.54 – வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)–இன் கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)–இன் கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

பேரவை பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் **திங்கள் 1–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**